ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2141/1 - 2019 සැප්තැම්බර් මස 16 වැනි සඳුදා - 2019.09.16
*2141/1 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MN/DS/L/D1/AQ/WPP/02.
காணி அமைச்சின் இல.: 4-3/2/2017/CEB/239.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வட மாகாணத்தில், மன்னார் மாவட்டத்தில், மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில், இல. 60, ஓலைத்தொடுவாய் கிராம அலுவலர் பிரிவில், ஓலைத்தொடுவாய் எனப்படும் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2019.09.06 ஆந் திகதி வரையப்பட்ட வரைபட இல. MN 830 இல் தொகுதி 01, 02 & 03 எனக் காட்டப்பட்டுள்ளதும், மொத்தமாக 3.3070 ஹெக்டயார் விஸ்தீரணத்தை உடைய ஓலைத்தொடுவாய்க்காணி மற்றும் ஓலைத்தொடுவாய்ஓடை எனக் குறிப்பிடப்படும் காணித் துண்டின் விபரம் பின்வருமாறு :

**வரைபட இல.** MN 830

*01.* **துண்டு இல. *01, 02 & 03***
காணியின் பெயர் : ஓலைத்தொடுவாய்காணி மற்றும் ஓலைத் தொடுவாய்ஓடை; விபரம் : தோட்டம் மற்றும் கிணறு, கால்வாய், பனை மரங்கள்; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருவோர்: களுத்தோட்ட இன்வெஸ்ட்மெண்ட் மற்றும் லீசிங் லிமிட்டட், 562/16, நாவல வீதி, ராஜகிரிய; விஸ்தீரணம்: 3.3070 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மன்னார் நகர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

க. சிவசம்பு,
பிரதேச செயலாளர்,
மன்னார் நகரம்.

பிரதேச செயலகம்,
மன்னார் நகரம்,
2019, செத்தெம்பர் 12.

10 - 12


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MN/DS/L/D1/AQ/WPP/43.
காணி அமைச்சின் இல.: 4-3/2/2018/CEB/162.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வட மாகாணத்தில், மன்னார் மாவட்டத்தில், மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில், இல. 62, தோட்டவெளி கிராம அலுவலர் பிரிவில், தோட்டவெளி எனப்படும் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2019.09.05 ஆந் திகதி வரையப்பட்ட வரைபட இல. MN 828 இல் தொகுதி 01, 02, 03 & 04 எனக் காட்டப்பட்டுள்ளதும், மொத்தமாக 2.2000 ஹெக்டயார் விஸ்தீரணத்தை உடைய தோட்டக்காணி எனக் குறிப்பிடப்படும் காணித் துண்டின் விபரம் பின்வருமாறு :

**வரைபட இல.** MN 828

01. **துண்டு இல. 01, 02, 03 & 04**

காணியின் பெயர் : தோட்டக்காணி; விபரம் : தோட்டம்; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருவோர்: உரிமையாளர் தெரியாது; அன்ரன் மரியரீணி, ஜோசப்வாஸ் நகர், தொட்டவெளி; பிரான்சிஸ் றீகன், ஜோசப்வாஸ் நகர், தொட்டவெளி; சம்சுதீன் மொகமட் வாஸிம், 177/55, மொஹைதீன் மஸ்ஜித் வீதி, மருதானை; அப்துல்காதர் முகமது பாஸீர், 13/1, மந்தைகாடு, நாகவில்லு, பாலாவி, புத்தளம்; விஸ்தீரணம் : 2.2000 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 10 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மன்னார் நகர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

க. சிவசம்பு,
பிரதேச செயலாளர்,
மன்னார் நகரம்.

பிரதேச செயலகம்,
மன்னார் நகரம்,
2019, செத்தெம்பர் 12.

10 - 13

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.